




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்









| Vol: 03 | Issue: 175 | 4 Pages | 23.01.2026 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 175 | 4 பக்கங்கள் | 23.01.2026 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்**
**பற்றிலர் நாணார் பழி**

**விளக்கம்: (மக்களுடைய சுற்றத்தாறின் தெடர்பு அற்றவரை நம்பித் தெளியக்கூடாது, அவர் உலகத்தில் பற்று இல்லாதவராகையால் பழிக்கு நாண மாட்டார்.**

## போரால் சீரழிந்த உக்ரைனின் மறுகட்டமைப்புக்கு... அமெரிக்காவில் முடக்கப்பட்ட ரஷிய சொத்துகளை தர தயார்: புதின்



மாஸ்கோ, ஜன.23

உக்ரைன் நாடு, நேட்டோவில் சேரும் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, 2022ம் ஆண்டு பிப்ரவரியில், அந்நாட்டின் மீது ராணுவ நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்ற பெயரில் ரஷியா போர் தொடுத்தது. இந்த போரானது 3 ஆண்டுகளை கடந்தும் முடிவுக்கு வராமல் தொடர்ந்து நீடித்து வருகிறது. போர் எதிரொலியாக லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு உள்ளதுடன் லட்சக்கணக்கானோர் புலம்பெயர்ந்து சென்று விட்டனர். போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தலைமையிலான அரசு ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில், அமெரிக்காவின் முயற்சியில் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பிறகு, போரால் கடுமையாக பாதிக்கப்பட்ட உக்ரைனின் மறுகட்டமைப்பு பணிகளுக்கு, அமெரிக்காவில் முடக்கி வைக்கப்பட்டு உள்ள ரஷிய சொத்துகளை தருவதற்கு தயார் என புதின் கூறியுள்ளார்.

புதினை, டிரம்ப் அரசில் சிறப்பு தூதர்களாக செயல்பட்டு வரும் ஸ்டீவ் விட்காப் மற்றும் ஜாரெட் குஷ்னர் ஆகியோர் இன்று சந்தித்து உக்ரைன் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழலில், ரஷிய பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் புதின் நேற்றிரவு பேசும்போது, காசா போர்நிறுத்த ஒப்பந்த திட்டம் தொடர்பான டிரம்ப்பின் அமைதி வாரியத்திற்கு 100 கோடி அமெரிக்க டாலர்களை (ரூ.9,161 கோடி) ரஷியா நன்கொடையாக வழங்கும் என கூறினார். அமெரிக்காவில் முடக்கி வைக்கப்பட்டு உள்ள ரஷிய சொத்துகளில் இருந்து அவை வழங்கப்படும்.

இந்த சொத்துகளில் கிடைக்கும் மீத தொகையை கொண்டு, போரால் பாதிக்கப்பட்ட உக்ரைனின் பகுதிகளில் மறுகட்டமைப்பு பணிகளை மேற்கொள்ள பயன்படுத்தப்படும். இதற்கான சாத்தியங்கள் தொடர்பாக அமெரிக்க நிர்வாகத்தின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறோம் என்றும் கூறினார்.

## போரை முடிவுக்கு கொண்டு வர ரஷியாஉக்ரைன் விருப்பம்: டாவோஸ் மாநாட்டில் டிரம்ப் பேச்சு




டாவோஸ், ஜன.23

சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் உலக பொருளாதார மன்றத்தின் 56வது வருடாந்திர உச்சிமாநாடு 23ந்தேதி வரை 5 நாட்கள் நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளை சேர்ந்த உலக தலைவர்கள் கலந்து கொண்டுள்ளனர். இந்தியாவில் இருந்து மத்திய மந்திரிகள், மராட்டியம், அசாம், ஆந்திர பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களை சேர்ந்த முதல்மந்திரிகள் பங்கேற்று சிறப்புரையாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், டாவோஸ் மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் பேசும்போது, ரஷியாஉக்ரைன் மோதல், நேட்டோ மற்றும் போரில் அமெரிக்காவின் பங்கு ஆகியவற்றை பற்றி குறிப்பிட்டார். ஜெலன்ஸ்கிக்கும், புதினுக்கும் இடையே வெறுப்புணர்வு இருந்தபோதும், போரை முடிவுக்கு கொண்டு வர முடியும் என அப்போது கூறினார்.

அவர் பேசும்போது, நான் 8க்கும் மேற்பட்ட போர்களை நிறுத்தி தீர்வு கண்டுள்ளேன். அதனால், இதுவும் அதுபோன்று எளிதில் நடந்து முடிந்து விடும் என நினைத்தேன். சில போர்களை எல்லாம் ஒரு சில மணிநேரத்தில் நிறுத்தி தீர்வு கண்டேன். ஏனென்றால், அந்தளவுக்கு இதுபோன்ற விவகாரத்தில் நான் நன்றாக செயல்படுபவன் என்பது உங்களுக்கே தெரியும் என்றார்.

இந்த விசயங்களை எல்லாம் ஐ.நா. அமைப்பு செய்ய வேண்டும். நான் செய்ய கூடாது. ஆனால் அது ஒரு விசயம் இல்லை. நாங்கள் கோடிக்கணக்கான மக்களை காப்பாற்றி இருக்கிறோம் என்றும் பேசியுள்ளார்.


ரஷியாஉக்ரைன் மோதல் விவகாரத்தில் ஜெலன்ஸ்கிக்கும், புதினுக்கும் இடையே பெரிய அளவில் வெறுப்புணர்வு உள்ளது. அது நிலைமையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு உதவாது.

எனினும், போர்நிறுத்த ஒப்பந்தம் வேண்டும் என ரஷியா விரும்புகிறது என்றே நான் நினைக்கிறேன். உக்ரைனும் கூட அதனையே விரும்புகிறது என நான் நினைக்கிறேன். நாங்கள் கிட்டத்தட்ட அதனை நெருங்கி விட்டோம் என கூறினார்.

சொல்ல போனால், இந்த மோதலுக்கு முதலில் ஐரோப்பிய நாடுகளே பொறுப்பு என நேட்டோவை குறிப்பிட்டு டிரம்ப் கூறினார். ஆனால், அவர்கள் அமெரிக்காவை நடத்தும் முறை சிறப்பாக இல்லை என்று குற்றச்சாட்டாகவும் கூறினார்.

உக்ரைன், நேட்டோவில் சேரும் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, 2022ம் ஆண்டு பிப்ரவரியில், உக்ரைன் மீது ராணுவ நடவடிக்கை என்ற பெயரில் ரஷியா போர் தொடுத்தது. 3 ஆண்டுகளை கடந்தும் போர் முடிவுக்கு வராமல் உள்ளது. போர் எதிரொலியாக லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு உள்ளனர். போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது.

# ரூ.60 கோடி மதிப்பீட்டில் ஒக்கியம் மடுவில் கட்டப்பட்டுள்ள நான்கு வழி சாலைப் பாலம்: மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்




சென்னை, ஜன.23

சென்னை, தலைமைச் செயலகத்தில் பல்வேறு துறை சார்ந்த திட்டங்களை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார். அதன் விவரம் வருமாறு:

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனம் சார்பில் 167 கோடியே 9 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தற்போதைய மந்தைவெளி பேருந்து பணிமனை மற்றும் முனையத்தில் ஒருங்கிணைந்த பன்முக போக்குவரத்து மற்றும் வணிக வளாகத்திற்கான கட்டுமான பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ராஜீவ் காந்தி சாலை ஒக்கியம் மடுவில் புதியதாக கட்டப்பட்டுள்ள நான்கு வழி சாலைப் பாலத்தை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் 16 கோடியே 88 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அதிநவீன உறை விந்து வங்கி, கால்நடை மருத்துவமனை, 4 கால்நடை மருந்தகங்கள், 2 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி நிலையம், இணை இயக்குநர் அலுவலகம், 2 ஒருங்கிணைந்த பண்ணைகள் மற்றும் தெருநாய்களுக்கான சிறப்பு கால்நடை மருத்துவ வளாகம் ஆகிய 12 கட்டடங்களை திறந்து வைத்து, 118 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 31 ஒருங்கிணைந்த கால்நடை பண்ணைகள் மற்றும் நவீன ஒருங்கிணைந்த இறைச்சி உற்பத்தி மற்றும் இறைச்சி பதப்படுத்தும் வளாகத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 126 இளநிலை உதவியாளர் மற்றும் 96 தட்டச்சர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

பதிவுத்துறையின் ஸ்டார் 3.0 திட்டத்தின் கீழ், காகிதமில்லா ஆவணப்பதிவு, நேரடி வருகையில்லா ஆவணப்பதிவு, தானியங்கி பத்திர உருவாக்கம், மறு விற்பனையாகும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு கட்டடக் களப்பணியின்றி ஆவணங்களை அன்றே திரும்ப வழங்கும் திட்டம், சொத்து தொடர்பான பரிவர்த்தனைகளை எளிய முறையில் வில்லங்கச்சான்றில் தேடுதல் உள்ளிட்ட 18 சேவைகள் உள்ளடக்கிய செயல் திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் வெளிநாட்டில் பட்டமேற்படிப்பு பயில 10 சிறுபான்மையின மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 10 சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு தலா 36 லட்சம் ரூபாய் கல்வி உதவித்தொகைக்கான ஆணைகளை வழங்கினார்.

மேலும், 2 தொன்மையான தேவாலயங்கள் மற்றும் 2 பழைமை வாய்ந்த தேவாலயங்களை புனரமைப்பதற்கு முதல் தவணைத் தொகையாக 1 கோடியே 81 லட்சத்து 97 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை தேவாலய பிரதிநிதிகளிடம் வழங்கினார்.

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பாக நடைபெறும் நிகழ்ச்சியில், தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் தொழில் பூங்கா மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையை கருத்தில்கொண்டு முள்ளக்காடு கிராமத்தில், நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் உற்பத்தித்திறன் கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் திட்டப்பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

# ஜூபிலன்ட் மோட்டார் வொர்க்ஸ் சென்னையில் ஜாவா, யெஸ்டி & பிஎஸ்ஏ ஷோரூமை தொடங்கியது




இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முன்னணி நிறுவனமான ஸ்வெலெக்ட் எனர்ஜி சிஸ்டம்ஸ் லிமிடெட் (BSE: 532051 | NSE: SWELECTES), முன்னர் நியூமெரிக் பவர் சிஸ்டம்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது தனது புதிய கார்ப்பரேட் லோகோ மற்றும் 'உலகிற்குப் பொறுப்புடன் ஆற்றல் அளித்தல்' (Powering the World Responsibly) என்ற பிராண்டின் முழக்க வாசகத்தை வெளியிட்டது.

பரிணாம வளர்ச்சியிலும், தூய்மையான மற்றும் நம்பகமான ஆற்றல் தீர்வுகளின் மீதும் இந்நிறுவனம் கொண்டிருக்கும் நீண்டகால உறுதிப்பாட்டில் இது ஒரு முக்கிய படிநிலையாகும். மேலும், 'நியூமார்ஜி' என்ற புதிய தயாரிப்புகளின் தொகுப்பையும் நிறுவனம் இன்று அறிமுகப் படுத்தியது. இது வீடுகள், சிறு அலுவலகங்கள் (SOHO) மற்றும் பெரிய அளவிலான வணிக மற்றும் தொழில்துறை (C&I) பயன்பாடுகளுக்குத் தேவையான, நம்பகமான, 24 மணி நேரமும் கிடைக்கக்கூடிய மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட பேட்டரி எனர்ஜி ஸ்டோரேஜ் சிஸ்டம்ஸ் (BESS) மற்றும் வீடுகளுக்கான விரிவான ஆற்றல் தீர்வுகளை உள்ளடக்கியது.

புதிய பிராண்ட் அடையாளம் குறித்து ஸ்வெலெக்ட் எனர்ஜி சிஸ்டம்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனரும் மற்றும் அதன் துணைத் தலைவருமான ரா.செல்லப்பன் பேசுகையில், "எங்களின் புதிய அடையாளம் நாங்கள் எவ்வளவு தூரம் கடந்து முன்னேறி வந்திருக்கிறோம் மற்றும், எந்த இலக்கை நோக்கி செல்கிறோம் என்பதைப் பிரதிபலிக்கிறது. 'நியூமெரிக்' பிராண்டின் மூலம் நம்பகமான மின் தீர்வுகளை உருவாக்கி வழங்கியதிலிருந்து, 'ஸ்வெலெக்ட்' மூலம் தூய்மையான எரிசக்தியில் கவனம் செலுத்துவது வரை, எங்களின் அடிப்படை விழுமியங்களான நம்பகத் தன்மை, பொறுப்பு மற்றும் நம்பிக்கை ஆகியவை மாறாமல் உள்ளன. வளர்ச்சியும் நிலைத்தன்மையும் கைகோர்த்து ஒருங்கிணைந்து செல்ல வேண்டும் என்ற எங்கள் நம்பிக்கையை 'Powering the World Responsibly' என்ற எமது புதிய முழக்க வாசகம் சரியாகப் பிரதிபலிக்கிறது," என்றார்.

# தமிழகத்தில் அரசு நிதியுதவி பெறும் கல்லூரி ஆசிரியர்கள் உள்ளிருப்பு போராட்டம்




திருநெல்வேலி, ஜன.24

தமிழகம் முழுவதும் அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஊதியம் மற்றும் நிலுவைத் தொகை வழங்க கோரி இன்று இரண்டாவது நாளாக உள்ளிருப்பு போராட்டம் நடத்தினர்.

கல்லூரி ஆசிரியர்களுக்கான பணி மேம்பாட்டிற்கான அரசாணை எண் 5 கடந்த 11.1.2021 அன்று வெளியிடப்பட்டது. இந்த அரசாணையின்படி அரசு கல்லூரி ஆசிரியர்களுக்கு பணி மேம்பாடு ஊதியம் மற்றும் நிலுவைத் தொகையோடு வழங்கப்பட்டு விட்டது. ஆனால் அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகளில் பணியாற்றிடும் பேராசிரியர்களுக்கு 5 ஆண்டுகளை கடந்த பின்பும் பணி மேம்பாடு ஆணை வழங்கப்பட்ட நிலையில் ஊதியம் மற்றும் நிலுவைத் தொகை வழங்கப்படாமல் நிறுத்தி வைக்க ப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் சங்க பொறுப்பாளர்களிடம் உயர் கல்வித்துறை அமைச்சர், ஜனவரி மாத ஊதியத்தில் சேர்க்கப்படும் என உறுதி அளித்த நிலையில் ஜனவரி மாதம் 20ம் தேதியைக் கடந்த பின்பும் அதற்கான ஏற்பாடுகள் நடைபெறாத நிலையில்,தற்போதுதமிழகம்முழுவதும்அனைத்து அரசுநிதிஉதவிபெறும்கல்லூரிகளிலும்ஆசிரியர்கள் தொடர்உள்ளிருப்பு போராட்டம் நேற்று தொடங்கி, இன்று இரண்டாவது நாளாக நடைபெற்றது.

இந்தஉள்ளிருப்புபோராட்டத்தில்திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த 25க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் மூட்டா அமைப்பின் சார்பில் மாநில, மண்டல மற்றும் மாவட்டஅளவிலான நிர்வாகிகள் உள்பட ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், சட்டப்பேரவை கூட்டத்தொடர் நடக்கின்ற இந்த காலகட்டத்தில் அரசின் கவனத்தை ஈர்க்கும்பொருட்டும், தமிழக முதல் அமைச்சர் இதில் தலையிட்டு உடனடியாக ஊதியம் வழங்கிட நடவடிக்கை எடுத்திடக் கோரியும் கல்லூரிகளில்தொடர் காத்திருப்பு போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.




தினகனி



# விஜய் தலைமையில் 25ந்தேதி தவெக செயல்வீரர்கள் கூட்டம்: தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை



சென்னை, ஜன.23

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் சட்டமன்ற தேர்தலை சந்திக்க தீவிரமாக தயாராகி வருகிறது. கடந்த சில நாட்களாக பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் ஆலோசனை கூட்டங்கள் நடந்து வருகின்றன. தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு மற்றும் தேர்தல் பிரசார குழு கூட்டங்கள் நடந்தன. அதே நேரத்தில், கடந்த டிசம்பர் 18ந்தேதி ஈரோட்டில் நடந்த மக்கள் சந்திப்புக்கு பிறகு விஜய் பொது நிகழ்வுகளில் பங்கேற்கவில்லை.

ஜனநாயகன் பட விவகாரம், சிபிஐ விசாரணை என்று தன்னை சுற்றிய விஷயங்களில் விஜய் தொடர்ந்து மவுனம் காத்து வருகிறார். இந்த நிலையில், வருகிற 25ந்தேதி விஜய் தலைமையில் தவெக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில் சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் என். ஆனந்த் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

வரும் 25ம் தேதி (25.01.2026, ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணிக்கு மாமல்லபுரம் ஃபோர் பாயிண்ட்ஸ் பை ஷெரட்டனில், தமிழக வெற்றிக் கழகத் தலைவர் கலந்துகொள்ளும் மாநில, மாவட்ட அளவிலான கழக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில், சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பாலியல் குற்றங்கள் திருவண்ணாமலையில் அதிகமாக நடக்கிறதா..? அமைச்சர் ரகுபதி பதில்



சென்னை, ஜன.23

தமிழக சட்டசபையின் 3ம் நாள் கூட்டத்தொடர் தொடங்கி நடைபெற்று வருகிறது. உறுப்பினர்கள் கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட துறைகளின் அமைச்சர்கள் பதில் அளித்தனர்.

இதன்படி கேள்வி நேரத்தின் போது பேசிய சட்டமன்ற உறுப்பினர் அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி, திருவண்ணாமலையில் மக்கள்தொகையின் எண்ணிக்கைக்கு ஏற்ப கிளை சிறைகளின் எண்ணிக்கை மற்றும் சிறைவாசிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த அமைச்சர் ரகுபதி, “சிறைவாசிகளின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்பது தான் இந்த அரசின் நோக்கம். சிறைவாசிகள் அதிகம் பேர் இருக்க கூடாது. திருந்தியவர்கள் அதிகம் இருக்க வேண்டும் அவர்களைநல்வழிபடுத்த வேண்டும் என்பது தான் முதல்அமைச்சரின் எண்ணம், செயல், சிந்தனை.

பாலியல் குற்றங்கள்திருவண்ணாமலையில் அதிகம் என்பது உண்மைக்கு புறம்பானது. தமிழகத்தில் 9 மத்திய சிறைச்சாலைகள், 13 மாவட்ட சிறைச்சாலைகள், 82 கிளை சிறைச்சாலைகள், 8 பெண்கள் சிறைச்சாலைகள், 3 திறந்த வெளி சிறைச்சாலைகள் உள்ளது. தமிழகத்தில் 23 ஆயிரத்து 783 சிறைவாசிகள் இருக்க அங்கீகரிக்கப்பட்டிருப்பதாகவும், அதில் 21,558 சிறைவாசிகள் உள்ளனர்” என்று அவர் கூறினார்.

# பணம் கேட்டு தொல்லை: வி.சி.க. எம்.எல்.ஏ. மீது சபாநாயகரிடம் புகார்



சென்னை, ஜன.23

சென்னையை அடுத்த கோவளத்தில் ஏரோ டான் என்ற நிறுவனம் சுற்றுலா ஹெலிகாப்டர்சேவையை தொடங்கியுள்ளது. இந்த நிலையில், ஏரோ டான் நிறுவன அதிகாரிகளிடம் பணம் கேட்டு தொந்தரவு செய்வதாக திருப்போரூர் தொகுதி விடுதலை சிறுத்தைகள் கட்சி எம்.எல்.ஏ. எஸ்.எஸ்.பாலாஜி மீது புகார்கள் எழுந்தது.

அதனைத் தொடர்ந்து, ஏரோ டான் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி நிசா என்பவர், சபாநாயகர் மு. அப்பாவுவை சென்னைதலைமைச்செயலகத்தில் சந்தித்து பேசினார். அப்போது, எம்.எல்.ஏ.வை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியதாக கூறப்படுகிறது.

# "அரசியலில் இருந்தே விலகுகிறேன்.." குன்னம் ராமச்சந்திரன் திடீர் முடிவு.!



சென்னை, ஜன.23

ஓ.பன்னீர்செல்வம் ஆதரவு எம்.எல்.ஏ.வான வைத்திலிங்கம் நேற்று தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு தி.மு.க.வில் இணைந்தார். அவரைத் தொடர்ந்து குன்னம் தொகுதி முன்னாள் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வான ராமச்சந்திரனும் தி.மு.க.வில் இணையப்போவதாக கூறப்பட்டது. அவரும் அதை உறுதி செய்தார்.

இந்த நிலையில், அரசியலில் பொதுவாழ்வில் இருந்து விலகுவதாக குன்னம் ராமச்சந்திரன் இன்று திடீரென அறிவித்துள்ளார். இது தொடர்பாக இன்று காலை வீடியோ பதிவு ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

”நேற்றைய தினம் திமுகவில் இணையப்போவதாக கூறினேன். அதற்கு ஒட்டுமொத்த குடும்ப உறுப்பினர்களும் எதிர்ப்பு தெரிவித்தனர். என்னை பெற்றெடுத்த தாய், வீட்டில் உள்ள ஜெயலலிதா படத்தை என்ன செய்வாய்? என்று கேட்டார். என்னுடைய மகளோ, இது அசிங்கமாக இல்லையா என்று கேட்டாள். இரவு முழுவதும் எனக்கு தூக்கம் வரவில்லை.

அதனால், பொதுவாழ்வில் இருந்து விலகும் முடிவை எடுத்துள்ளேன். உடல்நிலையை கருத்தில் கொண்டே இந்த முடிவை எடுக்கிறேன். நான் எந்த அரசியல் கட்சியிலும் இனி பயணிக்கப் போவதில்லை. அண்ணன் வைத்திலிங்கம், தொண்டர்கள் என்னை மன்னிக்கவும். தொண்டர்கள் அனைவரும் அவர்கள் விரும்பிய இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றட்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# வீட்டின் அருகே விளையாட சென்ற 3 வயது ஆண் குழந்தை.. சில நிமிடங்களில் நடந்த பெரும் துயரம்



ஆரணி, ஜன.23

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியை அடுத்த ராட்டினமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த இளவரசன் பவானி தம்பதியரின் மகன் சஞ்சீவ் மித்ரன் (வயது 3). நேற்று முன்தினம் இரவு வீட்டின் அருகே உள்ள தண்ணீர் தொட்டி முன்பு அவன் விளையாடிக் கொண்டிருந்தான். நீண்ட நேரம் விளையாடிய குழந்தை சஞ்சீவ் மித்ரனை திடீரென காணவில்லை. இதனால் பதறிய பெற்றோரும் அக்கம்பக்கத்தினரும் அவனை அந்த பகுதியில் தேடினர். அப்போது வீட்டின் அருகே இருந்த தண்ணீர் தொட்டியில் சஞ்சீவ் மித்ரன் தவறி விழுந்து தண்ணீரில் மூழ்கியது தெரியவந்தது. உடனடியாக குழந்தையை மீட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். அங்கு டாக்டர்கள் பரிசோதித்ததில் குழந்தை சஞ்சீவ் மித்ரன் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதைக்கேட்டதும் அவனது பெற்றோரும், உறவினர்களும் கதறி அழுதது உருக்கமாக இருந்தது. இந்த சோக சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

# உவரி சுயம்புலிங்க சுவாமி கோவிலில் தைப்பூச திருவிழா நாளை ஆரம்பம்



கன்னியாகுமரி, ஜன.23

உவரி ஸ்ரீ சுயம்புலிங்க சுவாமி திருக்கோவிலில் தைப்பூச திருவிழா நாளை (24.1.2026) தொடங்குகிறது நாளை காலை 4.30 மணிக்கு மங்கள இசையுடன் விழா தொடங்குகிறது. காலை 5.30 மணிக்கு யானைமீது கொடி பட்டம் ஊர்வலமும் தொடர்ந்து 7 மணிக்கு கொடி ஏற்றுதலும் நடக்கிறது.

தைப்பூச திருவிழா பிப்ரவரி 2ஆம் தேதி வரை 10 நாட்கள் நடக்கிறது. விழா நாட்களில்தினமும்காலை காலை 7 மணிக்கு விநாயகர் வீதி உலா வருதலும், 11.30 மணிக்கு உச்சகால பூஜையும், 12 மணிக்கு அன்னதானமும் இரவு 7 மணிக்கு சுவாமி வீதி உலா வரதலும், அதனைத் தொடர்ந்து சமய சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

முதல் நாள் இரவு 8 மணிக்கு சுவாமி இந்திர வாகனத்தில் வீதி உலாவருதலும், 25ஆம் தேதி கஜ வாகனத்திலும் 26 ஆம் தேதி அன்ன வாகனத்திலும், 27 ஆம் தேதி கைலாய பர்வதம் வாகனத்திலும், 28ஆம் தேதி காம தேனு வாகனத்திலும், 29ஆம் தேதி குதிரை வாகனத்திலும், 30ஆம் தேதி சட்டங்கால் சப்பரத்தில் சிவப்பு சாத்தி வருதலும், 31ஆம் தேதி சட்டங்கால் சப்பரத்தில் பச்சை சாத்தி சுவாமி வீதி உலாவருதலும் நடக்க உள்ளது.

31ஆம் தேதி இரவு 7.30 மணிக்கு சுவாமி தங்க தேரில் வள்ளி தெய்வானையுடன் வீதி உலா வருதலும், பிப்ரவரி 1ஆம் தேதி காலை 7.00 மணிக்கு பெரிய தேரோட்டமும் நடக்க உள்ளது. இரவு 11 மணிக்கு சுவாமி ரிஷப வாகனத்தில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். பிப்ரவரி 2ஆம் தேதி இரவு 10 மணிக்கு தெப்ப திருவிழா நடக்க உள்ளது. தேரோட்டத்தை முன்னிட்டு உவரி சுயம்புலிங்க சுவாமி அன்னதான சேவா அறக்கட்டளை சார்பில் காலை முதல்அன்னதானம்நடக்க உள்ளது.

# தமிழக சட்டப்பேரவையில் இருந்து அதிமுக எம்எல்ஏக்கள் வெளிநடப்பு



சென்னை ஜன.23

தமிழக சட்டசபையின் 3ம் நாள் கூட்டத்தொடர் தொடங்கி நடைபெற்று வருகிறது. உறுப்பினர்கள் கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட துறைகளின் அமைச்சர்கள் பதில் அளித்து வருகின்றனர். இந்த நிலையில் கறிக்கோழி பிரச்சினை தொடர்பாக விவாதிக்க வேண்டும் என்றும் அதிமுக எம்எல்ஏக்கள் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தனர். நேரமில்லா நேரத்தில் இதுகுறித்து விவாதிக்க நேரம் கேட்டனர். மேலும் இதனை உடனே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கூறினர்.

நேரமில்லா நேரத்தில் விவாதிக்க வேண்டும் என்றால் முன் அனுமதி பெற வேண்டும்.

கவன ஈர்ப்பு தீர்மானத்தில் பேச அனைவருக்கும் அனுமதி கொடுக்க முடியாது. சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் பதில் பெறப்பட்டு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று சபாநாயகர் கூறினார். கவன ஈர்ப்பு தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள மறுத்ததால் அதிமுக எம்எல்ஏக்கள் அமளியில் ஈடுபட்டனர்.

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, விவசாய பிரச்சினை சார்ந்த விவாதத்தை எழுப்ப தான் நேரம் கேட்கிறோம். பேரவையில் சில நிமிடம் நேரம் கொடுப்பதில் என்ன பிரச்சினை? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், கவன ஈர்ப்பு தீர்மானத்துக்கான பதில் தயாராகி வருகிறது. நாளைய தினம் அதிகாரிகளுடன்கலந்து பேசி, பதில் தயார் செய்துகொண்டு சம்பந்தப்பட்ட அமைச்சர் பதில் அளிப்பார். சபாநாயகர் கூறிய பிறகும் பிரச்சினை எழுப்புவது நேரத்தை வீண்டிக்கும் செயல் என்று கூறினார்.

இந்த நிலையில் முதல் அமைச்ரின் பதிலை ஏற்க மறுத்து அதிமுக எம்எல் ஏக்கள் சட்டமன்றத்தில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

# தூத்துக்குடியில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டப் பணிக்கு அடிக்கல்

சென்னை, ஜன.23

சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து பல் வேறு துறைகள் சார்ந்த திட்டப்பணிகளை முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார். இதன்படி தூத்துக்குடி முள்ளக்காட்டில் ரூ.2,292 கோடி மதிப்பில், 60 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் திட்டப் பணிக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்

மேலும் சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனம் சார்பில் அமைக்கப்படும் மந்தைவெளி பஸ் பணிமனை மற்றும் ஒருங்கிணைந்த பன்முக போக்குவரத்து மற்றும் வணிக வளாகத்திற்கும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை சார்பில் ராஜீவ் காந்தி சாலை ஒக்கியம் மடுவில் புதிதாக கட்டப்பட்டுள்ள நான்கு வழி சாலைப் பாலத்தை முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

# தமிழகத்தில் 22 லட்சம் பேருக்கு பட்டா; சட்டசபையில் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் தகவல்

சென்னை, ஜன.23

தமிழக சட்டசபையில் இன்றைய கேள்வி நேரத்தின்போது பேசிய, திருப்பத்தூர் சட்டசபை உறுப்பினர் நல்லதம்பி, எலவம்பட்டி, மதுராமைக்காடு மற்றும் ஜெகன்நாதன் வட்டம் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன், இந்த ஆட்சியில் இதுவரை 22 லட்சம் பேருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. எனவே இவர்களுக்கும் பட்டா வழங்குவதற்கான வழிவகைகளை இந்த அரசு ஆராய்ந்து, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் அளித்தார்.

# ஊத்துக்கோட்டை பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்த பரிசீலனை: அமைச்சர் கே.என். நேரு



சென்னை, ஜன.23

தமிழக சட்டசபையில் இன்றைய கேள்வி நேரத்தில், கும்மிடிப்பூண்டி தொகுதிக்கு உட்பட்ட, ஊத்துக்கோட்டை பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? என சட்டசபை உறுப்பினர் கோவிந்தராஜன் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, ஊத்துக் கோட்டையை நகராட்சியாக்கும் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதாகவும், பேரூராட்சிகளின் அருகில் உள்ள ஊராட்சி பகுதிகளை இணைத்து பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்துவது குறித்து குழு அமைத்து பரிசீலிக்கப் பட்டு வருவதாக கூறினார்.

மேலும், ஊராட்சிகளை நகர்ப்புற அமைப்புகளோடு சேர்த்தால் 100 நாள் வேலைத்திட்டம் நின்றுவிடும் என்று ஊராட்சிகளை சார்ந்த மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால், ஊராட்சிகளை பேரூராட்சிகளோடு இணைத்து நகராட்சிகளாக தரம் உயர்த்தும் பணியை தற்போது நிறுத்தி வைத்துள்ளதாகவும், மிக அவசியமான கோரிக்கையை மட்டும் பரிசீலித்து வருகிறோம் என்றும் கூறினார்.

அதேபோல், மீஞ்சூர் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தில் 100 எம்.எல்.டி குடிநீர் வழங்க வேண்டிய இடத்தில் ஒப்பந்ததாரர் 20 முதல் 30 எம்.எல்.டி குடிநீர் மட்டுமே வழங்கியதாகவும், இப்போது அரசே அதனை ஏற்றுள்ள நிலையில், விரைவில் மீஞ்சூர் பகுதியில் கடல் நீரை குடிநீர் ஆக்கும் திட்டம் மூலம் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

# 24ந்தேதி முதல் பிராட்வே பேருந்து நிலையம் செயல்படாது என அறிவிப்பு



சென்னை, ஜன.23

பிராட்வே பேருந்து நிலையத்தில் மறுசீரமைப்பு மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் நடைபெற இருப்பதால், கடந்த 7ந்தேதி முதல் இங்கிருந்து இயக்கப்பட்ட பஸ்கள் ராயபுரம் மற்றும் தீவுத்திடலில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருக்கும் பஸ் முனையத்திலிருந்து இயக்கப்படும் என்று சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் குறிப்பிட்ட தேதியில் இந்த மாற்றம் செயல்படுத்தப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த நிலையில், 24ந்தேதி முதல் பிராட்வே பேருந்து நிலையம் செயல்படாது என சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் அறிவித்து உள்ளது. அதாவது, பிராட்வே பஸ் நிலையத்திலிருந்து இயக்கப்பட்ட பஸ்கள் ராயபுரம் மற்றும் தீவுத்திடலில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருக்கும் பஸ் முனையங்களில் இருந்து 24ந்தேதி முதல் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாஜக தலைவர்களுக்கு எடப்பாடி பழனிசாமி விருந்து

சென்னை,

தமிழக சட்டசபை தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், கூட்டணிக் கணக்குகளும், தொகுதிப் பங்கீடுகளும் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. தேசிய ஜனநாயக கூட்டணியைப் பொறுத்தவரை அதிமுக தலைமையில் பாஜக, பாமக, தமாகா, புதிய நீதிக் கட்சி உள்ளிட்ட கட்சிகள் ஏற்கனவே கைகோர்த்துள்ளன.

இதற்கிடையில், தேசிய ஜனநாயக கூட்டணியின் முதல் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டம் நாளை (23ம் தேதி) மதுராந்தகத்தில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார். இதனை முன்னிட்டு அனைத்துக் கூட்டணி தலைவர்களையும் ஒரே மேடையில் ஒன்றிணைத்து, பலத்தை நிரூபிக்க வேண்டும் என்ற நோக்கில் கூட்டணியை இறுதிப்படுத்தும் பணிகள் திவீரமாக நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், பாஜக தலைவர்களுக்கு எடப்பாடி பழனிசாமி இன்று விருந்தளிக்கிறார். பியூஸ் கோயல், நயினார் நாகேந்திரன், வானதி சீனிவாசன் உள்ளிட்ட பாஜக தலைவர்கள் இதில் பங்கேற்றுள்ளனர். இந்த சந்திப்பின் போது கூட்டணியில் தொகுதி பங்கீடு உளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து பேசப்படலாம் என்று தெரிகிறது.

# தி.மு.க.வில் இணைகிறேனா..? முன்னாள் அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் பதில்



திருச்சி, ஜன.23

திருச்சியை சேர்ந்தவர் வெல்லமண்டி நடராஜன். இவர் கடந்த 2021ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். எடப்பாடி பழனிசாமி அமைச்சரவையில் சுற்றுலாத்துறை அமைச்சராக பதவி வகித்தார். அ.தி.மு.க.வில் பிளவு ஏற்பட்டபோது இவர் ஓ.பன்னீர்செல்வம் அணிக்கு மாறினார்.

இந்நிலையில் ஓ.பன்னீர்செல்வம் அணியில் இருந்த முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம், முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று தி.மு.க.வில் இணைந்தார். அவருடன் முன்னாள் அமைச்சர் வெல்லமண்டி நடராஜனும் தி.மு.க.வில் சேரப்போவதாக தகவல் வெளியாகி இருந்தது.

இந்நிலையில் தி.மு.க.வில் நான் இணைவதாக கூறுவது தவறான தகவல் என்று முன்னாள் அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் தெரிவித்தார். இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், "நான் திருச்சியில் தான் இருக்கிறேன். வேறு எங்கும் செல்லவில்லை. எனக்கு தி.மு.க.வில் சேரும் எண்ணம் இல்லை. முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர் செல்வத்துடன் தொடர்ந்துபயணிப்பேன்.

அவர் எந்த முடிவு எடுத்தாலும் அது ஆணித்தரமான, நிரந்தரமான முடிவாக இருக்கும் என கருதுகிறேன். கூட்டணி குறித்து கருத்து சொல்லும் பெரிய இடத்தில் நான் இல்லை. முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் என்னிடம் எதுவும் பேசவில்லை. அ.தி.மு.க.வில் 5 முறை மாவட்ட செயலாளராகப் பதவி வகித்துள்ளேன். 16 ஆண்டுகள் அவைத் தலைவராகவும் இருந்துள்ளேன்" என்று கூறினார்.

இதனைத்தொடர்ந்து தேசிய ஜனநாயக கூட்டணியில் சேருவீர்களா? என்ற கேள்விக்கு இப்போது பதில் சொல்ல முடியாது. அதற்கு இன்னும் நிறைய காலம், நேரம் இருக்கிறது" என்று வெல்லமண்டி நடராஜன் கூறினார்.

# இன்ஸ்டாகிராம் மூலம் பழக்கம்: 16 வயது சிறுமியை கர்ப்பமாக்கிய சிறுவன் போக்சோவில் வழக்குப்பதிவு



திருவள்ளூர் ஜன.23

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி அருகே உள்ளகிராமத்தைச்சேர்ந்த கூலித்தொழிலாளிகளான தம்பதிக்கு 16 வயதில் மகள்உள்ளார். 5ம் வகுப்பு வரை மட்டுமே படித்த அந்த சிறுமி, பெற்றோர் வேலைக்குச்சென்றநேரங்களில் செல்போனில் அதிக நேரத்தை செலவழித்து உள்ளார். அப்போது இன்ஸ்டாகிராம் மூலம் சென்னையைச் சேர்ந்த 16 வயது சிறுவனுடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

நட்பில் தொடங்கி பின்னர் காதலாக மாறிய நிலையில், கடந்த 5 மாதங்களுக்கு முன்பு ஓடும் மின்சார ரெயிலில் சிறுவன் சிறுமிக்கு தாலி கட்டியுள்ளார். அதன் பின்னர் பலமுறை இருவரும் தனிமையில் உல்லாசமாக இருந்ததாகவும் கூறப்படுகிறது. இந்த விவகாரம் வெளியே யாருக்கும் தெரியாமல் இருவரும் தங்களது வீட்டில் வழக்கம்போல் வசித்து வந்துள்ளனர்.

இந்த நிலையில், சிறுமிக்கு தொடர்ந்து வயிற்று வலி ஏற்பட்டதால், அவரது தாய் சென்னை அரசு மருத்துவனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார். அங்கு மருத்துவர்கள் மேற்கொண்ட பரிசோதனையில், சிறுமி 3 மாத கர்ப்பமாக இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து சிறுமியின் கர்ப்பத்திற்கு காரணமான சென்னையைச் சேர்ந்த 16 வயது சிறுவன் மீது கும்மிடிப்பூண்டி போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ்வழக்குப்பதிவுசெய்து, விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

# குடும்பத்தகராறில் மாமனாரை அரிவாளால் வெட்டிய வாலிபர் கைது

தூத்துக்குடி ஜன.23

நெல்லைகங்கைகொண்டான் அருகே உள்ள வெங்கடாசலபுரம் பகுதியைச் சேர்ந்தவர் உலகநாதன் (வயது 55). மாற்றுத்திறனாளியான இவர் விவசாயம் செய்து வந்தார். மேலும் மும்பையில் இட்லி வியாபாரம் செய்து வருகிறார். இவரது மகள் செல்வி(25) என்பவருக்கும், முக்கூடல் அருகே உள்ள பாப்பாக்குடி பகுதியைச் சேர்ந்த தொழிலாளியான கருப்பசாமி(30) என்பவருக்கும் கடந்த 8 மாதங்களுக்கு முன் திருமணம் நடந்தது.

பின்னர் புதுமண தம்பதி, உலகநாதனுடன் சேர்ந்து மும்பைக்கு சென்று இட்லி வியாபாரம் செய்தனர். அங்கு சென்ற சில நாட்களிலேயே கணவன்மனைவி இடையே தகராறு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. கடந்த 4 மாதங்களுக்குமுன்கருத்து வேறுபாடு காரணமாக செல்வி கோபித்துக் கொண்டு வெங்கடாசலபுரத்திற்கு வந்துவிட்டார். இதனால் மனமுடைந்த கருப்பசாமியும் பாப்பாக்குடிக்கு வந்தார்.

மனைவியை தன்னுடன் குடும்பம் நடந்த வருமாறு கருப்பசாமி அழைத்தார். ஆனால் செல்வி மறுத்துவிட்டதாக கூறப்படுகிறது. இந்த சம்பவங்களுக்கு இடையே பொங்கல் விடுமுறைக்கு உலகநாதனும் ஊருக்கு வந்துவிட்டார். நேற்று முன்தினம் காலையில் உலகநாதன், செல்வி ஆகியோர் கயத்தாறுக்கு சென்றனர். அங்குள்ள ஜவுளிக்கடையில் செல்வியை விட்டுவிட்டு, உலகநாதன் மட்டும் அருகில் இருந்த ஒரு வங்கிக்கு சென்றார். இதை அறிந்த கருப்பசாமியும் கயத்தாறுக்கு சென்றார்.

திருநீலகண்டஈஸ்வரர் கோவில் முன் உலகநாதனை வழிமறித்த கருப்பசாமி, செல்வியை தன்னுடன்அனுப்பிவைக்குமாறு கூறினார். இதனால் அவர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டது. இதில் ஆத்திரம் அடைந்த கருப்பசாமி தான் மறைந்து வைத்திருந்த அரிவாளால் உலகநாதனை சரமாரியாக வெட்டியதாக கூறப்படுகிறது. அப்போது கையால் தடுக்க முயன்றபோது உலகநாதனின் வலது கை விரல் துண்டானது. இதனால் அவர் அலறித்துடித்தார்.

பின்னர்கருப்பசாமி அங்கிருந்து தப்பி ஓடினார். இதை பார்த்த பொதுமக்கள் சுமார் 1 கிலோ மீட்டர் விரட்டிச்சென்று கருப்பசாமியை பிடித்தனர். மேலும் கயத்தாறு போலீசுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. இன்ஸ்பெக்டர் ஆனந்தகுமார் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். கருப்பசாமி போலீசில் ஒப்படைக்கப்பட்டார்.

உலகநாதன் மற்றும் துண்டான அவரது கை விரல் ஆகியவற்றை போலீசார் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் நெல்லை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் போலீசார் வழக்குப்பதிவு செய்து, கருப்பசாமியை கைது செய்து கோவில்பட்டி கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# தமிழகத்தில் அதிகரிக்கும் சிக்குன் குனியா பாதிப்பு.. பொது சுகாதாரத்துறை எச்சரிக்கை.!




சென்னை, ஜன.23

தமிழகத்தில் கடந்த சில மாதங்களாகவே சிக்குன் குனியாவின் தாக்கம் மீண்டும் ஏற்பட்டுள்ளது. தற்போது சென்னை, விழுப்புரம், செங்கல்பட்டு, தென்காசி உள்ளிட்ட மாவட்டங்களில் சிக்குன் குனியா பாதிப்பு அதிகரித்துள்ளது. சிக்குன் குனியா பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில், மாவட்ட அளவில் கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு மாவட்ட சுகாதார அதிகாரிகளுக்கு பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து, பொது சுகாதாரத்துறை அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

சென்னை, விழுப்புரம், தென்காசி, தேனி, கடலூர், செங்கல்பட்டு, காஞ்சீபுரம், அரியலூர் ஆகிய மாவட்டங்களிலும் சிக்கன்குனியாபாதிப்புகள் அதிகரித்து காணப்படுகிறது. எனவே, மாவட்ட சுகாதார அதிகாரிகள் உரிய கண்காணிப்புடன் கூடிய நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ள வேண்டும்.

ஆஸ்பத்திரிகள் மற்றும் ஆய்வகங்களில் உரிய நேரத்தில் சிக்குன் குனியா பரிசோதனைகளை முன்னெடுத்து நோய்ப் பரவலைத் தடுப்பது அவசியம். ஆஸ்பத்திரிகளில் டெங்கு அல்லது சிக்குன் குனியாவுக்கென பிரத்யேக வார்டுகளை அமைக்க வேண்டும். பாதிப்பை கண்டறியும் எலிசா பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான உபகரணங்களை போதிய அளவு இருப்பில் வைத்திருப்பது கட்டாயம். நடமாடும் மருத்துவ விரைவுக் குழுக்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மாவட்ட கலெக்டர்கள் தலைமையில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன் அதனை ஆய்வு செய்வதும் முக்கியம்.

வீடுதோறும் கொசு உற்பத்தியை கண்காணிப்பதற்கான பணியில் போதிய நபர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும். மாவட்ட பூச்சியியல் வல்லுனர்கள், சுகாதார ஆய்வாளர்கள் வீடுகள் தோறும் லார்வா புழு உற்பத்தி குறித்த பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். காய்ச்சல் பாதிப்பு பதிவான பகுதிகளில் தீவிர தூய்மை பணிகளை செய்ய வேண்டும். தேவையான அளவு பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் உபகரணங்கள் இருப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும். தண்ணீர் தேங்கும் அனைத்து பொருட்களையும் அப்புறப்படுத்த வேண்டும்.

திடக்கழிவுகளை முறையாக அகற்றுவது கட்டாயம். வாரம் ஒரு முறை தண்ணீர் தொட்டிகளை சுத்தம் செய்வது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். சிக்குன் குனியா தொடர்பான விழிப்புணர்வை மக்களிடத்திலே ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நெல்லையில் மது அருந்த பணம் கேட்டு மிரட்டிய 2 பேர் கைது

திருநெல்வேலி ஜன.23

திருநெல்வேலி மாநகரம் சந்திப்புகாவல்நிலைய எல்லைக்குட்பட்ட சி.என்.கிராமம் பகுதியில் கடை நடத்தி வருபவர் சுப்புலட்சுமி (வயது 40). இவரிடம் அதே பகுதியை சேர்ந்த கருப்பசாமி மகன் இசக்கி ராஜா(33) என்பவர் மது அருந்த பணம் கேட்டுள்ளார். சுப்புலட்சுமி பணம் தர மறுத்த காரணத்தினால் அவரை அவதூறு வார்த்தைகளால் பேசி, அச்சுறுத்தி, தாக்கி சுமார் ரூ.500 மதிப்புள்ள காய்கறிகளை சாலையில் வீசியுள்ளார்.

இதுகுறித்த அவர் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து இசக்கிராஜாவை போலீசார் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

இதேபோல் திருநெல்வேலி மாநகரம் பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ரொட்டிக்கடை பஜார் பகுதியில் பேட்டை ராஜீவ்காந்தி நகரை சேர்ந்த சம்சுதீன் மகன் இஸ்மாயில்(42) என்பவர் நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கே அவரை சரித்திர பதிவேடு குற்றவாளியான தாழையூத்து பகுதியை சேர்ந்த குமரய்யா மகன் முருகன்(எ) வேல்முருகன்(34) வழிமறித்து மது அருந்த பணம் கேட்டுள்ளார். இஸ்மாயில் பணம் தர மறுத்த காரணத்தினால் அவரை முருகன் அவதூறு வார்த்தைகளால் பேசி, அச்சுறுத்தி, கத்தியால் தாக்கி கொலை செய்ய முயன்றுள்ளார். இதுகுறித்து அவர் கொடுத்த புகாரின் பேரில் முருகன்(எ) வேல்முருகனை போலீசார் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

# ஆபாசமாக படம் பிடித்து வரதட்சணை கேட்டு மிரட்டிய கணவர்... இளம்பெண் தற்கொலை



விழுப்புரம் ஜன.23

விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் அருகே உள்ள பக்கிரிபாளையம் கிராமத்தை சேர்ந்தவர் நாராயணமூர்த்தி. இவரது மகள் பிரியங்கா (30 வயது), தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி வந்தார். இவருக்கும்புதுச்சேரிவில்லியனூர் பகுதியை சேர்ந்தவருக்கும் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் திருமணம் நடந்தது.

வரதட்சணை தொடர்பாக மணமகன், மணமகள் இரு வீட்டாருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது. இதையடுத்து பிரியங்கா கணவரை பிரிந்து தனது பெற்றோர் வீட்டில் வசித்து வந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் வீட்டில் தனியாக இருந்த பிரியங்கா தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். திருமணமாகி இரண்டரை மாதமே ஆன நிலையில் பிரியங்கா இறந்ததால் அவரது சாவு குறித்து விழுப்புரம் ஆர்.டி.ஓ. விசாரணை நடத்தி வருகிறார்.

இதற்கிடையே பிரியங்காவின் தற்கொலை குறித்து அவரது தாயார் சுமதி போலீசில் பகீர்புகார் அளித்துள்ளார். அதில், "மகளின் திருமணத்தின்போது 10 பவுன் நகை வரதட்சணையாக கொடுப்பதாக கூறினோம். ஆனால் 5 பவுன் மட்டுமே அப்போது கொடுக்க முடிந்தது. அதனால் எனது மகளை ஆபாசமாக படம் பிடித்து வைத்துக் கொண்டு, மீதி 5 பவுன்தராவிட்டால், அந்த ஆபாச படத்தை சமூக வலைதளத்தில் பதிவிடுவதாக அவரது கணவரே மிரட்டியு ள்ளார். இதனால் மனமுடைந்த எனது மகள் தற்கொலைசெய்துகொண்டார். ஆகவே அவரது தற்கொலைக்கு காரணமான கணவர் உள்பட அவரது பெற்றோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# காஞ்சீபுரம்: நாய் கடித்து 3 மாதங்களுக்கு பிறகு ரேபிஸ் நோய் தாக்கி மாணவன் உயிரிழப்பு



காஞ்சீபுரம், ஜன.23

காஞ்சீபுரம் மாவட்டம் வாலாஜாபாத் அருகே உள்ள சின்னிவாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர் பாஸ்கர். இவரது மனைவி கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பு இறந்து விட்டார். இவர்களது மகன் சபரிவாசன் (வயது 15). அதே பகுதியில் உள்ள அரசு பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வந்தார்.

கடந்த 3 மாதத்திற்கு முன்பு சபரிவாசன் வீட்டின் வெளியே நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது அதே பகுதியில் இருந்த வெறிநாய் ஒன்று அவரை கடித்துள்ளது. இதில் சபரிவாசனுக்கு லேசான காயம் ஏற்பட்ட நிலையில், நாய் கடித்ததை தந்தையிடம் தெரிவித்தால் திட்டுவார் என்று பயந்து இதுபற்றி கூறாமல் மறைத்துள்ளார்.

மேலும் தனது பாட்டியிடம் தெரிவித்தபோது ஆஸ்பத்திரியில் உரிய சிகிச்சை பெறாமல் நாய் கடித்த இடத்தில் பச்சிலை மூலிகையை கட்டியதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், கடந்த வாரம் சபரிவாசனின் உடல் நிலை மோசமாகியுள்ளது. மேலும் அவரது நடவடிக்கையிலும் மாற்றம் ஏற்பட்டது.

இதையடுத்து அவரை செங்கல்பட்டு அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு அவருக்கு ரேபிஸ் நோய் பாதிப்பு ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது. பின்னர்மேல்சிகிச்சைக்காக சபரிவாசனைசென்னை அரசு ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி சபரிவாசன் பரிதாபமாக இறந்தார். நாய் கடித்து 3 மாதத்திற்கு பிறகு ரேபிஸ் பாதிப்பு ஏற்பட்டு மாணவர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# சட்டசபை தேர்தலில் கூட்டணியா?.. தனித்து போட்டியா?.. த.வெ.க. செயல்வீரர்கள் கூட்டத்தில் அறிவிப்பாரா விஜய்?



சென்னை, ஜன.23

தமிழகத்தில் இன்னும் சில மாதங்களில் சட்டசபை தேர்தல் நடக்க இருக்கிறது. ஆளும் கட்சிக்கு முன்னரே முந்தி கொண்ட பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் தேர்தல் பிரசார தேரை ஓட்ட தொடங்கி விட்டார்.

அதே சமயத்தில், மகளிருக்காக செயல்படுத்திய திட்டங்கள் உள்பட தாங்கள் கொண்டு வந்த முக்கிய திட்டங்கள் மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளதால், ஆளும் கட்சியான தி.மு.க. நிச்சயம் வருகிற தேர்தலில் வெற்றி பெற்று விடலாம் என்ற நம்பிக்கையில் உள்ளது. இருந்தாலும், ஓரணியில் தமிழ்நாடு என்ற முன்னெடுப்பை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் மேற்கொண்டு வருகிறார்.

அதேசமயம் தமிழக சட்டசபை தேர்தலை சந்திக்க த.வெ.க.வும் தீவிரமாக இறங்கியுள்ளது. நடிகர் விஜய் புதிதாக தொடங்கிய கட்சியான தமிழக வெற்றிக் கழகம் நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் புதிதாக களம் காண இருக்கிறது. நடிகர் விஜய் நடத்தி வரும் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் பல்வேறு கருத்துகளை தெரிவித்து வருகிறார். ஆளுங்கட்சியான தி.மு.க.வும், ஆண்ட கட்சியான அ.தி.மு.க.வும் பல்வேறு கவர்ச்சிகரமான அறிவிப்புகளை வெளியிட்டு வரும் நிலையில், நடிகர் விஜய்யோ, சாத்தியமான திட்டங்களை மட்டுமே மக்களுக்காக நிறைவேற்றுவோம் என்று கூறியிருக்கிறார்.

இதனிடையே கடந்த சில நாட்களாக பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் ஆலோசனை கூட்டங்கள் நடந்து வருகிறது. தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு மற்றும் தேர்தல் பிரசார குழு கூட்டங்கள் நடந்தன. அதேநேரத்தில், கடந்த டிசம்பர் 18ந்தேதி ஈரோட்டில் நடந்த மக்கள் சந்திப்புக்கு பிறகு விஜய் பொது நிகழ்வுகளில் பங்கேற்கவில்லை.

ஜனநாயகன் பட விவகாரம், சி.பி.ஐ. விசாரணை என்று தன்னை சுற்றிய விஷயங்களில் விஜய் தொடர்ந்து மவுனம் காத்து வருகிறார். இந்தநிலையில், வருகிற 25ந்தேதி விஜய் நிர்வாகிகளை சந்தித்து பேச இருக்கிறார். 25ந்தேதி மாமல்லபுரத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நடக்கும் த..வெ.க. செயல் வீரர்கள் கூட்டத்தில் அவர் பங்கேற்கிறார்.

இந்த கூட்டத்தில் அரசியல் சார்ந்த பல்வேறு விஷயங்கள் குறித்து விஜய் பேச இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இதற்கிடையே, த.வெ.க. தேர்தல் பிரசார ஆலோசனை குழு கூட்டம் பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன், தேர்தல் மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர். மேலும் பல்வேறுகட்சிகளைச்சேர்ந்தவர்கள்த.வெ.க.வில்இணைந்தனர்.

இந்த கூட்டத்தில், தேர்தல் பிரசார வியூகம், பிரசார மேற்கொள்ள வேண்டிய இடங்கள், மக்கள் சந்திப்பு குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. அதன்படி பிரசார பயண திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டத்திற்கு பிறகு செங்கோட்டையன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறுகையில், "த.வெ.க. சார்பில் வருகிற 26ந்தேதி சென்னையில் இருந்து எங்கள் பிரசார பயணத்தை மேற்கொள்ள இருக்கிறோம். 234 தொகுதிகளிலும் கட்சி நிர்வாகிகளுடன் பணிகளை மேற்கொள்வோம். ஒவ்வொரு இடத்திலும் செயல் வீரர்கள்கூட்டத்தை நடத்தி, தேர்தல் பணிகள் குறித்த ஆலோசனைகளை வழங்க இருக்கிறோம். கூட்டணியா?.. தனித்து போட்டியா? என்பது குறித்து விஜய் அறிவிப்பார்" என்று தெரிவித்தார்.

# சென்னையில் மாபெரும் குப்பை சேகரிப்பு இயக்கமான குப்பைத் திருவிழா



சென்னை, ஜன.23

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 200 வார்டுகளில் மாபெரும் குப்பை சேகரிப்பு இயக்கமானகுப்பைத்திருவிழாஇன்று(21.01.2026)தொடங்கி நடைபெற்றது.

பெருநகரசென்னைமாநகராட்சிப் பகுதிகளில் உருவாகும் குப்பைகள் குப்பை கிடங்குகளுக்கு செல்லாத நிலையை உறுதிசெய்து, அவற்றை மீண்டும் பயன்படுத்தும் வளமாக மாற்றும் வகையில் மாபெரும் குப்பை சேகரிப்பு இயக்கமான "குப்பைத் திருவிழா" 200 வார்டுகளிலும் இன்று (21.01.2026) தொடங்கி நடைபெற்றது.

23.01.2026 வரை மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாபெரும் குப்பை சேகரிப்பு இயக்கத்தில் பழைய காகிதங்கள், நெகிழிகள், உடைந்த மரப் பொருட்கள், பழுதான மின்னணு உபகரணங்கள், உபயோகமில்லாத கண்ணாடி பொருட்கள், அட்டைப் பெட்டிகள் என பயன்படுத்தப்படாத குப்பைகளான பழைய பொருட்களை (21.01.2026) தனித்தனியாகப் பிரித்து சேகரம் செய்து. அதனை, வளமாக மாற்றவும், அகற்றிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றை கண்காணிக்க சுகாதார ஆய்வாளர்கள் பொறுப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

"உருவாகும்" குப்பைகள் குப்பை கிடங்குகளுக்கு செல்லாத நிலையை (Zero Waste to Landfill) உறுதிசெய்து, அவற்றை மீண்டும் பயன்படுத்தும் வளமாக மாற்றம் செய்வதே இதன் நோக்கமாகும். மேலும், மக்களிடையே குப்பைகளை கொட்டும் பழக்கத்திலிருந்து மாற்றி, அவற்றை பொறுப்புடன் ஒப்படைக்கும் கலாச்சாரத்தை உருவாக்குவதற்கான ஒரு மாநில அளவிலான திருவிழாவாகும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

23.01.2026

# பொதுமக்களை அச்சுறுத்தும் ஆடியோவை பரப்பினால் நடவடிக்கை: தூத்துக்குடி காவல்துறை எச்சரிக்கை




தூத்துக்குடி ஜன.23

வாடிக்கையாளர் சேவை மையத்தில் இருந்து 6 இலக்க நம்பரில் இருந்து அழைப்பு வருகிறது. அந்த அழைப்பை ஏற்றால்செல்போன்வெடித்து விடும் என தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து பேசுவதாக வாட்ஸ்அப் ஆடியோ பரவி வருவது குறித்து மறுப்பு தெரிவித்துள்ளதோடு, இந்த வாட்ஸ்அப் ஆடியோ தவறாக பரப்பப்பட்டது எனவும் தூத்துக்குடியில் இதுபோன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை எனவும், பொது மக்கள் யாரும் அச்சப்பட தேவையில்லை எனவும் தூத்துக்குடி மாவட்ட காவல்துறை அளித்துள்ள விளக்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

தற்போது வாட்ஸ்அப்பில் "ஹலோ நான் தூத்துக்குடியில் இருந்து பேசுகிறேன், கஸ்டமர் காலில் 5 அல்லது 6 நம்பரிலிருந்து அழைப்பு வருது, அதை யாரும் அட்டன் பண்ண வேண்டாம். அதை அட்டன் பண்ணினால் பிளாஸ்ட் ஆகி செல்போன் வெடித்து விடும், தூத்துக்குடியில் 27 பேர் செத்துட்டாங்க, இத சேர் பண்ணுங்க" என வாட்ஸ்அப்பில் ஒரு ஆடியோ பரவி வருகிறது. இதுகுறித்து தூத்துக்குடி மாவட்ட காவல் துறை விசாரணை மேற்கொண்டதில், தூத்துக்குடி மாவட்டத்தில் இதுபோன்ற எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை எனவும், இதுபழைய வாட்ஸ்அப் ஆடியோ எனவும், அந்த பொய்யான வாட்ஸ்அப் ஆடியோ தவறாக தற்போது மீண்டும் பரப்பப்பட்டு வருவதும் கண்டுபிடிக்கப்பட்டது.

எனவே இந்த வாட்ஸ்அப் ஆடியோ குறித்து பொதுமக்கள் யாரும் அச்சமடைய வேண்டாம் எனவும், மேலும் இந்த வாட்ஸ்அப் ஆடியோவை யாருக்கும் பகிர வேண்டாம் எனவும் பொதுமக்கள் நலன் கருதி மாவட்ட காவல்துறை தெரிவித்துக் கொள்கிறது. இதுபோன்று பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையிலோ அல்லது பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையிலோ வாட்ஸ்அப்ல் தவறான தகவலை பரப்புவது சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். மீறி மேற்படி ஆடியோவை சமூக வலைதளங்களில் பரப்பினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தூத்துக்குடியில் திருடப்பட்ட 2 பைக்குகள் மீட்பு: 2 பேர் கைது

தூத்துக்குடி ஜன.23

தூத்துக்குடி செயின்ட் மேரிஸ் காலனியைச் சேர்ந்த ராகவன் மகன் ஜான் (வயது 40), கடந்த 15ம் தேதி கிருஷ்ணராஜபுரத்தில் உள்ள ஒரு கடை முன்பு தனது பைக்கை நிறுத்திவிட்டு சென்றுள்ளார். சிறிது நேரத்திற்கு பின்னர் திரும்பி வந்து பார்த்தபோது பைக் திருடுபோனது தெரியவந்தது.

இதுகுறித்து அவர் வடபாகம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அந்த புகாரின் பேரில் சப்இன்ஸ்பெக்டர் சிவகுமார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார். இந்த நிலையில் இந்த வழக்கு தொடர்பாக தூத்துக்குடி முத்தையாபுரம் தங்கம் மாள்புரத்தை சேர்ந்த ஜெயராம் மகன் ஜெய்சந்திரன்(40) மற்றும் 17 வயது இளஞ்சிறார் ஒருவரை பிடித்து போலீசார் விசாரித்தனர். விசாரணையில் அவர்கள் ஜான் பைக்கையும், தூத்துக்குடி டி.ஆர். தெருவை சேர்ந்த நம்பி மகன் சிவசுப்பிரமணியன்(55) என்பவர் தனது வீட்டு முன்பு நிறுத்தி இருந்த பைக்கையும் திருடிச் சென்றது தெரியவந்தது. இதனையடுத்து மேற்சொன்ன இளஞ்சிறார் உள்பட 2 பேரையும் போலீசார் கைது செய்தனர். 2 பைக்குகளையும் பறிமுதல் செய்தனர்.

# சாலையில் நடந்து சென்ற பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை: வாலிபர் கைது

விருதுநகர், ஜன.23

விருதுநகர் பகுதியை சேர்ந்த 15 வயது சிறுமி அங்குள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வருகிறார். இவர் சிறப்பு வகுப்பு முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

அப்போது மாரீஸ்வரன் (24) என்பவர் அந்த மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்த புகாரின் பேரில் விருதுநகர் அனைத்து மகளிர் போலீசார் விசாரணை நடத்தி போக்சோ வழக்கில் மாரீஸ்வரனை கைது செய்தனர். இந்த வழக்கு தொடர்பாக மேலும் ஒருவரை தேடி வருகின்றனர்.

# கல்லூரிகளின் ஆய்வகங்களை மேம்படுத்துவதற்கு ரூ.19.18 கோடி நிதி ஆணையினை வழங்கினார் கோவி. செழியன்

சென்னை, ஜன.23

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

இன்று (21.01.2026) சென்னை, கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் 112 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் ஆய்வகங்களை மேம்படுத்துவதற்கு ரூ.19.18 கோடி நிதி ஒப்பளிப்புக்கான ஆணையினை வழங்கினார்.

தமிழ்நாடு முதல்அமைச்சர் தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளிய கிராமப்புற மாணவர்கள் உலகத்தரத்தில் உயர்கல்வியில் சிறந்து விளங்கிட வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு 'நான்முதல்வன்', 'புதுமைப்பெண்', 'தமிழ்ப்புதல்வன்' எனப் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளார். இதனால் இன்று இந்தியாவிலேயே உயர்கல்வியில் மாணவர் சேர்க்கையில் முதலிடத்தில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. இக்கல்வி ஆண்டின் (20252026), மாணவர் சேர்க்கையில், புதிதாக 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அரசு கல்லூரி, அரசு உதவி பெறும் கல்லூரி, சுய நிதிக் கல்லூரி என அனைத்து வகைக் கல்லூரிகளிலும் பயிலும் 10 லட்சம் மாணவர்களுக்கு நவீனத் தொழில்நுட்பத்திற்கேற்ப மடிக்கணினி (LAPTOP) வழங்கப்பட்டுள்ளது.

மேலும், முதல்அமைச்சரின் அறிவுறுத்தலின்படி, போதையில்லாத் தமிழ்நாட்டை உருவாக்கும் நோக்கில் அனைத்துக் கல்லூரிகளிலும் போதை விழிப்புணர்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. பாலினச் சமத்துவத்தைப் பேணும் வகையில் கல்லூரிகள் தோறும் உளவியல் விழிப்புணர்வுக் குழுக்களும் அமைக்கப்பட்டு மாணவர்களிடையே உரிய புரிதலுணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதே போல், அனைத்துக் கல்லூரிகளிலும் முன்னாள் மாணாக்கர்கள் சங்கம் உருவாக்கிட அறிவுறுத்தியத்திற்கிணங்கத் தற்போது அனைத்து அரசு கல்லூரிகளிலும் 'முன்னாள் மாணாக்கர்கள் சங்கம்' உருவாக்கப்பட்டுக் கல்லூரிகளுக்குத் தேவையான கூடுதல் வசதிகளை ஏற்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்துதமிழ்நாடுமுதல்அமைச்சரின் வழிகாட்டுதலின்படி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் ஆய்வகங்களை மேம்படுத்துவதற்கு ரூ.19.18 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அதன்படி, இன்று 112 அரசு கல்லூரிகளுக்கான நிதி ஒப்பளிப்பு ஆணையினை உயர்கல்வித்துறை அமைச்சர் வழங்கினார். இந்நிகழ்வில் உயர்கல்வித்துறைச் செயலாளர் பொ. சங்கர் கல்லூரிக் கல்வி ஆணையர் எ. சுந்தரவல்லி மற்றும் கல்லூரிக் கல்வி இயக்கக அலுவலர்கள் கலந்துகொண்டனர். அறிவியல் கல்வியையும் ஆய்வக வசதியையும் மேலும் மேம்படுத்துவதன் வாயிலாக உயர்கல்வியில் தமிழ்நாடு உலகத்தரத்தை எட்ட முடியுமென்ற முதல்அமைச்சரின் செயல்திட்டத்திற்குச் சிறப்புச் சேர்ப்பதாக இந்நிகழ்வு அமைந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (23.01.2026)




திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். உடன்பிறந்தவர்கள் ஆதரவாக இருப்பார்கள். பணியிடத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.




பண வரவு திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பழைய பாக்கிகள் வசூலாகும். இனிமையான செய்தி தேடி வரும்.




புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நண்பர்களின் உதவி மனதிற்குத் தெம்பளிக்கும். ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.




செலவுகள் அதிகரிக்கலாம், திட்டமிட்டுச் செயல்படுவது அவசியம். பயணங்களின் போது கவனம் தேவை. பொறுமையைக் கடைபிடிக்கவும்.




எடுத்த காரியத்தில் வெற்றி காண்பீர்கள். மூத்த சகோதரர் வகையில் ஆதாயம் உண்டு. திருமண முயற்சிகள் கைகூடும்.




உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில்லாபம்அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.




அதிர்ஷ்டகரமான நாள். ஆன்மீகப் பயணங்கள் செல்ல நேரிடும். தந்தையார் வழியில் நல்ல செய்திகள் வரும். செல்வாக்கு உயரும்.




தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பணக் கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. எதிலும் நிதானமாகச் செயல்படவும்.




கணவன்மனைவி இடையே நெருக்கம் அதிகரிக்கும். கூட்டுக் தொழிலில் லாபம் கிடைக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும்.




எதிர்ப்புகள் விலகும். கடன் தொல்லைகள் குறைய வழி பிறக்கும். வழக்குகளில் உங்களுக்குச் சாதகமான சூழல் உருவாகும்.




பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கலைத்துறையினருக்குப் புதிய வாய்ப்புகள்வரும். பூர்வீகசொத்துச் சிக்கல்கள் தீரும்.




தாயாரின் உடல் நலத்தில் அக்கறை தேவை. வீடு, வாகன மாற்றங்கள் பற்றி சிந்திப்பீர்கள். மனதிற்குள் இருந்த குழப்பங்கள் நீங்கும்.

# குடியரசு தினம்: திருச்சி விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு



திருச்சி, ஜன.23

குடியரசு தினவிழா வருகிற 26ந் தேதி கொண்டாடப்பட உள்ளது. இந்த நிலையில் குடியரசு தினவிழாவில் பயங்கரவாதிகள் நாசவேலையில் ஈடுபட வாய்ப்பு உள்ளதாக உளவுப்பிரிவு போலீசாருக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிகிறது. எனவே குடியரசு தின விழாவையொட்டி நாடு முழுவதும் பாதுகாப்பை பலப்படுத்த மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

ஒவ்வொரு மாநில அரசுக்கும் உள்துறை அமைச்சகம் சார்பில் பாதுகாப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று கடிதம் அனுப்பி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு உள்ளன. அதன்படி திருச்சி விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக திருச்சி விமான நிலையத்தின் நுழைவு வாயிலில் மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் நின்று விமான நிலையத்திற்கு வரும் வாகனங்களை சோதனை செய்து அனுப்பி வைக்கிறார்கள்.

2வது கட்டமாக விமான நிலைய வாகன நிறுத்தம் பகுதியில் மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் சோதனையில் ஈடுப்பட்டு வருகிறார்கள். 3வது கட்டமாக விமான நிலையத்தில் முனைய நுழைவு வாயிலில் மோப்பநாய் உதவியுடன் பயணிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 4வது கட்டமாக பயணிகளின் உடைமைகள் ஸ்கேனர் கருவி மூலம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது.

5வது கட்டமாக பயணிகள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டு விமானநிலைய முனையத்துக்குள் அனுமதிக்கப்படுகின்றனர். மேலும் விமானநிலையத்தில் முனைய பகுதியில் முன்னறிவிப்பு இன்றி நிறுத்தப்படும் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. முக்கிய பிரமுகர்கள் வருகை தரும் பகுதியிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த 5 அடுக்கு பாதுகாப்பு வருகிற 30 ந்தேதி வரை நீடிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. குடியரசு தினத்தன்று விமானநிலையத்தில் விமான நிலைய இயக்குனர் ராஜு தேசியக்கொடி ஏற்றி வைக்கிறார். தொடர்ந்து பல்வேறு கலைநிகழ்ச்சிகளும், மோப்பநாயின் சாகச நிகழ்ச்சிகளும் நடக்கிறது.

# தனுஷ் 55 படத்தின் அப்டேட் வெளியிட்ட படக்குழு




தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களில் ஒருவர் தனுஷ். இவர் 'இட்லி கடை'. "தேரே இஸ்க் மெய்ன்" ஆகிய படங்களின் வெற்றியை தொடர்ந்து, போர்தொழில் பட இயக்குனர் விக்னேஷ் ராஜா இயக்கத்தில் கர என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார். ஐசரி கே. கணேஷ் தயாரிக்கும் இந்த படம் இந்த ஆண்டு கோடை விடுமுறையில் வெளியாக உள்ளது.

இந்த படத்தை தொடர்ந்து நடிகர் தனுஷ், 'அமரன்' பட இயக்குனர் ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் நடிக்க உள்ளார். வுண்டர்பார் பிலிம்ஸ் தயாரிக்கும் இந்த படத்திற்கு தனுஷ் 55 என்ற டைட்டில் தற்காலிகமாக வைக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் இந்த படத்தின் பூஜை நடைபெற்றது. விரைவில் படப்பிடிப்பு பணிகள் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், தனுஷ் 55 படத்தின் அப்டேட்டை தயாரிப்பு நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதன்படி, இப்படத்தின் முக்கிய அறிவிப்பு ஒன்று இன்று மாலை 5 மணியளவில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை அப்டேட், படத்தின் டைட்டிலாக இருக்குமோ என்று எதிர்பார்த்து ரசிகர்கள் ஆவலுடன் காத்துக்கொண்டுள்ளனர்.

# சிம்புவுடன் கூட்டணி அமைக்கும் இயக்குனர் ஏ.ஆர்.முருகதாஸ்!



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான சிம்பு, தற்போது இயக்குநர் வெற்றிமாறன் இயக்கத்தில் உருவாகி வரும் 'அரசன்' திரைப் படத்தில் நடித்து வருகிறார். வடசென்னை கதைக்களத்தை அடிப்படையாகக் கொண்ட கேங்ஸ்டர் படமாக இந்த படம் தயாராகி வருகிறது. கலைப்புலி எஸ்.தாணு தயாரிக்கும் இப்படத்தில், சிம்பு இரு வேறு தோற்றங்களில் நடித்துள்ளார். அனிருத் இசையமைக்கும் இந்த படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி, சமூக வலைதளங்களில் வைரலானது. தற்போது இப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

இதனைத் தொடர்ந்து, 'டிராகன்' படத்தின் இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில் சிம்பு புதிய படம் ஒன்றில் நடிக்க உள்ளார். இந்த படத்திற்கான அறிவிப்பு ஏற்கனவே வெளியாகியுள்ள நிலையில், விரைவில் படப்பிடிப்பு தொடங்கப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், நடிகர் சிலம்பரசன் பிரபல இயக்குனர் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த படத்திற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும், விரைவில் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.

# திருப்பூரில் வைரமுத்து பங்கேற்ற நிகழ்ச்சியில் செருப்பு வீசப்பட்டதால் பரபரப்பு

திருப்பூரில் பாடலாசிரியர் வைரமுத்துவை நோக்கி செருப்பு வீசப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நடைபெற்ற தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க வந்த வைரமுத்துவிற்கு அங்கு இருந்த வழக்கறிஞர்கள் வரவேற்பு அளித்தனர்.

அப்போது அங்கு போராட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் செருப்பு வீசியதால் பரபரப்பு ஏற்பட்டது. செருப்பு வீசிய பெண் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் போலீஸ் தரப்பில் சொல்லப்படுகிறது. எனினும், இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.



# இந்தோனேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன்: பி.வி.சிந்து, லக்சயா சென் வெற்றி

இந்தோனேசிய மாஸ்டர்ஸ் சர்வதேச பேட்மிண்டன் போட்டி ஜகர்த்தாவில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த முதலாவது சுற்றில் உலக தரவரிசையில் 33வது இடம் வகிக்கும் இந்திய வீரர் ஸ்ரீகாந்த், 22ம் நிலை வீரரான கோகி வாடனாபியை (ஜப்பான்) எதிர்கொண்டார். 1 மணி 12 நிமிடம் நீடித்த திரில்லிங்கான ஆட்டத்தில் ஸ்ரீகாந்த் 2115, 2123, 2422 என்ற செட் கணக்கில் கோகி வாட்னாபியை அடக்கி 2வது சுற்றுக்கு முன்னேறினார்.

இதே போல் இந்தியாவின் லக்சயா சென் 2113, 1621, 2114 என்ற செட் கணக்கில் சீன தைபேயின் வாங் சு வெய்யை வென்றார். மற்ற இந்திய வீரர்களான எச்.எஸ்.பிரனாய், கிரண் ஜார்ஜ், ஆயுஷ் ஷெட்டி ஆகியோர் முதல் சுற்றுடன் நடையை கட்டினர்.

பெண்கள் ஒற்றையர் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் ஒலிம்பிக்கில் 2 பதக்கம் வென்றவரான இந்தியாவின் பி.வி.சிந்து 2220, 2118 என்ற நேர்செட்டில் ஜப்பானின் மனாமி சுய்சூவை தோற்கடித்து 2வது சுற்றுக்குள் நுழைந்தார்.

மற்றொரு ஆட்டத்தில் இந்திய வீராங்கனை அன்மோல் கார்ப் 2116, 2117 என்ற நேர்செட்டில் சீன தைபேயின் பாய் யூ போவை விரட்டியடித்தார். அதே சமயம் ஆகர்ஷி காஷ்யப் 218, 2022, 1721 என்ற செட் கணக்கில் டென்மார்க்கின் ஜூலி டாவலிடம் போராடி பணிந்தார். மாள்விகா பான்சோத், தன்வி ஷர்மா ஆகியோரும் முதல் சுற்றுடன் வெளியேறினர்.

# சர்வதேச செஸ் போட்டி: குகேஷ்பிரக்ஞானந்தா ஆட்டம் டிரா



டாட்டா ஸ்டீல் 88வது செஸ் தொடர் நெதர்லாந்தின் விஜ்க் ஆன் ஜீ நகரில் நடந்து வருகிறது. இதில் 13 சுற்றுகள் கொண்ட மாஸ்டர்ஸ் பிரிவில் 4வது சுற்று ஆட்டம் ஒன்றில் நடப்பு சாம்பியன் பிரக்ஞானந்தா உலக சாம்பியன் குகேஷ் மோதினர். வெள்ளை நிற காய்களுடன் ஆடிய குகேஷ் 40வது நகர்த்தலில் 'டிரா' செய்தார். குகேஷ் தொடர்ச்சியாக சந்தித்த 4வது டிரா இதுவாகும். பிரக்ஞானந்தா 2 டிரா, 2 தோல்வி கண்டுள்ளார்.

அர்ஜூன் எரிகைசி (இந்தியா) அனிஷ் கிரி (நெதர்லாந்து) இடையிலான ஆட்டம் 80வது நகர்த்தலில் டிராவில் முடிந்தது. இந்திய வீரர் அரவிந்த் சிதம்பரம் 55வது நகர்த்தலுக்கு பிறகு அமெரிக்காவின் ஹான்ஸ் மோக் நிமானிடம் தோல்வியை தழுவினார்.

4வது சுற்று முடிவில் ஹான்ஸ் மோக் நிமான், நோடிர்பெக் அப்துசத்தோரோவ் (உஸ்பெகிஸ்தான்) தலா 3 புள்ளிகளுடன் முன்னிலை வகிக்கின்றனர்.

# 2வது டி20 போட்டி: வெஸ்ட் இண்டீசை வீழ்த்தி ஆப்கானிஸ்தான் அபார வெற்றி



ஆப்கானிஸ்தான், வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டி20 தொடர் துபாயில் நடைபெறுகிறது. இதில் முதல் ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் வெற்றிபெற்றது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான 2வது டி20 போட்டி துபாயில் நேற்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.

இதையடுத்து களமிறக்கிய ஆப்கானிஸ்தான் 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 189 ரன்கள் குவித்தது. அந்த அணியின் ரசோலி அதிகபட்சமாக 68 ரன்கள் குவித்தார். ஆப்கானிஸ்தான் தரப்பில் அந்த அணியின் மேத்திவ் அதிகபட்சமாக 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனை தொடர்ந்து 190 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ் 18.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 150 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் வெஸ்ட் இண்டீசை 39 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி ஆப்கானிஸ்தான் அபார வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரை 20 என்ற புள்ளி கணக்கில் ஆப்கானிஸ்தான் கைப்பற்றியது. இரு அணிகளுக்கும் இடையேயான கடைசி டி20 போட்டி இன்று இரவு 8 மணிக்கு நடைபெற உள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066